
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1001

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

144

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...



# கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம்!

## உலகத் தரத்தில் ஓர் உள்ளூர் சந்தை!

சென்னை, கொளத்தூர் பகுதி வண்ண மீன் வர்த்தகத்தில் நாட்டிலேயே முக்கிய மையமாகத் திகழ்ந்துவருகிறது.

கொளத்தூர் பகுதியைச் சுற்றியுள்ள ரெட்டேரி, விநாயகபுரம், லட்சுமிபுரம் மற்றும் மாதவரம் போன்ற பகுதிகளில் 300 க்கும் மேற்பட்ட மீன் வளர்ப்புப் பண்ணைகள் உள்ளன. இந்தப் பண்ணைகளில் ரூ.1 முதல் 1.50 லட்சம் ரூபாய் வரை அனைத்து வகையிலான வண்ண மீன்கள் வளர்க்கப்படுகின்றன.

இங்கு வளர்க்கப்படும் அலங்கார வண்ண மீன்கள் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடகாவுக்கும், தாய்லாந்து, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பல நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

வண்ண மீன்கள் மட்டுமல்லாது, மீன் உணவுகள், மீன் வளர்ப்புத் தொட்டிகள், கற்கள், அலங்காரப் பொருள்கள் என மீன் வளர்ப்பவர்களின் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் கொளத்தூர் பூர்த்தி செய்கிறது. வண்ண மீன் வர்த்தக மையத்தை வைத்து வளர்ப்புப் பறவைகள், புறா, முயல் என பெரும் வர்த்தகம் நடைபெற்று வருகிறது.

### பட்ஜெட்டில் அறிவிப்பு

கடந்த 2021-ஆம் ஆண்டு, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், கொளத்தூர் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கச் சென்ற முதலமைச்சர் அவர்கள், வண்ண மீன் உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். குறிப்பாக, வண்ண மீன் வர்த்தகத்தினை சர்வதேச அளவில் எடுத்துச் செல்லவும், சந்தைப்படுத்துதலுக்கான தேவைகள் குறித்தும் கேட்டறிந்து செயல்படுத்தத் திட்டமிட்டார்.

அதன் அடிப்படையில், வண்ண மீன் வர்த்தகத்தை பெரிய அளவில் மேம்படுத்த தமிழ்நாட்டில் முதன்முறையாக உலகத் தரத்திலான பிரத்யேக வண்ண மீன் வர்த்தக மையம் நிறுவப்படும் என 2021-22-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, வடசென்னை பகுதியின் நலனைக் கருத்தில்கொண்டு, 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வரும் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம் உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டன.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் ஒருங்கிணைப்புடன், சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில் கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம் அமைக்க, 2024-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26-ஆம் தேதி அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.





### மையத்தின் சிறப்பம்சங்கள்

15 ஆயிரத்து 945 சதுர மீட்டர் நிலப் பரப்பளவில் 11ஆயிரத்து 650 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டடம் உருவாக்கப்பட்டு, அதில் 188 வண்ண மீன் விற்பனைக் கடைகள், 5 உணவகங்கள் அமைக்கப் பட்டுள்ளன.



இந்தக் கட்டடத்தைக் கடந்த 11.10.2025 அன்று திறந்துவைத்து, கடை ஒதுக்கீடு ஆணைகளையும் பயனாளிகளுக்கு வழங்கினார் முதலமைச்சர். இந்த வண்ண மீன் வர்த்தக மையம், மொத்தம் மற்றும் சில்லறை வண்ண மீன்கள் விற்பனை செய்வதற்காக 185 கடைகள், ஆய்வகம், பயிற்சிக் கூடம், உணவு அரங்கம், பார்வையாளர் அரங்கம் என அனைத்து வசதிகளுடன் அமைக்கப் பட்டுள்ளது.



தரைத்தளத்தில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் 48 கடைகள், 30 சதுர மீட்டர் பரப்பளவில் 5 கடைகள், 21 முதல் 37 சதுர மீட்டர் பரப்பளவில் 11 கடைகள் என மொத்தம் 64 கடைகளும், 150 சதுர மீட்டர் பரப்பளவில் ஓர் அலுவலகமும் அமைக்கப்பட்டுள்ளன.

முதல் தளத்தில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் 58 கடைகள், 21 முதல் 37 சதுர மீட்டர் பரப்பளவில் 12 கடைகள் என மொத்தம் 70 கடைகளும், இரண்டாம் தளத்தில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் 46 கடைகள், 21 முதல் 37 சதுர மீட்டர் பரப்பளவில் 8 கடைகள், என மொத்தம் 54 கடைகளும் ஓர் உணவகமும் அமைக்கப் பட்டுள்ளன.

3 மின் தூக்கிகள், 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி, 3 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், 200 இரண்டு சக்கர வாகனங்களும், 188 நான்கு சக்கர வாகனங்களும் நிறுத்துவதற்கான வசதிகளும் உள்ளன.

சென்னையின் புதிய அடையாளமாக உருவாக்கப் பட்டுள்ள இந்த வண்ண மீன் வர்த்தக மையத்தின் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் கிடைப்பதுடன், இப்பகுதியில் வண்ண மீன் வர்த்தகம் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடையும். குறிப்பாக, வண்ண மீன் உற்பத்தியாளர், விற்பனையாளர் மற்றும் ஏற்றுமதியாளர் ஆகியோருக்கான சந்திப்பு மையமாக இது திகழ உள்ளது.

> **“வண்ண மீன் உற்பத்தியாளர், விற்பனையாளர் மற்றும் ஏற்றுமதியாளர் ஆகியோருக்கான சந்திப்பு மையமாக இது திகழ உள்ளது.”**

...சாதனை தொடரும்

## ஏன், எதற்கு, எப்படி? கட்டுரைப் போட்டி!

மாணவர்கள் மற்றும் பொதுமக்களை போலிச் செய்தி, வெறுப்புப் பேச்சு, அறிவியலுக்குப் புறம்பான கருத்துகள் ஆகியவற்றில் இருந்து மடைமாற்றி, பகுத்தறிவுப் பாதையில் வழிநடத்தும் நோக்குடன், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையத்துடன் இணைந்து தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம், ‘ஏன், எதற்கு, எப்படி?’ என்ற விழிப்பு உணர்வுப் போட்டியை நடத்துகிறது. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, வாசகம் எழுதும் போட்டி, குறும்படப் போட்டி, மீம்ஸ் தயாரித்தல் போட்டி, புகைப்படப் போட்டி, ஓவியப் போட்டி என எட்டுவிதமான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.




இதில்,

* அனைவரும் சமம்
* மதச்சார்பற்ற இந்தியா
* போலிச்செய்திகளைப் புறக்கணிப்போம்
* சமூகநீதியில் முன்னோடியாய் விளங்கும் தமிழ்நாடு
* இடஒதுக்கீடு – தமிழ்நாடு முன்னத்தி ஏர்
* பெண்ணியம் பேசுவோம் ஆண்களே

ஆகிய 6 தலைப்புகள் கட்டுரைப் போட்டிக்குத் தரப்பட்டுள்ளன. கட்டுரைப் போட்டிக்கான படைப்புகளை, அக்டோபர் 31-ஆம் தேதிக்குள் அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்புக்குமான உள்ளடக்கம் எப்படி அமைய வேண்டுமென்ற விவரக் குறிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட க்யூ.ஆர். கோடை ஸ்கேன் செய்து, அந்த விவரக் குறிப்புகளையும், போட்டிக்கான விதிமுறைகளையும் அறிந்துகொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்





மு.முருகேசன்

### குழந்தையாக இருந்தபோது தலைவருடன்...

1973-ஆம் ஆண்டு, திருநெல்வேலியில், ஆசிய கண்டத்திலேயே முதல் முறையாக ஈரடுக்குப் பாலம் அமைத்து, சாதனை செய்தார் முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர். ‘திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலம்’ எனப் பெயர் சூட்டி, அதை 1973 -ஆம் ஆண்டு நவம்பர் 13-ஆம் தேதி திறந்து வைத்தார். அந்த நிகழ்ச்சிக்காக நெல்லைக்கு வருகை தந்த தலைவருக்கு, கோவில்பட்டி ரயில் நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டபோது எடுத்த படம். நகர்மன்றத் தலைவர் மு.பெரியசாமியுடன், என் தந்தை அ.முத்துக்கண்ணு குழந்தையாக இருந்த என்னையும் தூக்கிக் கொண்டு தலைவரோடு படம் எடுத்துக்கொண்டார்.

**– மு.முருகேசன்,**
**ஒன்றியப் பொருளாளர், சிவகங்கை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருக

### தி.மு.க. முதல் சட்டமன்ற வேட்பாளர்கள்!

1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 1,284 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் தி.மு.க வேட்பாளர்கள் 124 பேர். நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர்கள் 24 பேர். இவர்கள் தவிர, 7 சட்டமன்ற வேட்பாளர்களுக்கும், 5 நாடாளுமன்ற வேட்பாளர்களுக்கும் தி.மு.க. ஆதரவு கொடுத்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131